037

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை 2007
அரசியலமைப்பு சட்டம் II - LWU 2314
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 14.03.2007 நேரம்: மு.ப 10.00 - பி.ப 1.00 மணி வரை

ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

## பகுதி I – அடிப்படை உரிமைகள்
(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களுக்கு விடை தருக)

1. தொழிற் சங்கம் ஒன்றின் தலைவரான சமந்த 2007 பெப்ரவரி 14ஆம் திகதி காலை 8 மணியளவில் அவனுடைய கட்சி தலைமைக் காரியாலயத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டான். கைது செய்யப்பட்டபோது கைதிற்குரிய காரணங்களை பொலிஸாரிடம் சமந்த வினவினான். பொலிஸார் காரணங்களை கொடுக்க மறுத்தனர். பொலிஸ் அலுவலர்கள். சமந்தவை ஏசியதுடன் பலாத்காரமாக ஜீப்பிலே ஏற்றினர். சமந்தவை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வருகிற போது பொலிஸாரால் அவன் தாக்கப்பட்டதுடன் கன்னத்தில் அறையப்பட்டான். அவன் பொலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டான். பொலிஸ் கட்டுக்காவலில் இருந்த போது சமந்த தொடர்ச்சியாக பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டான். விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது பொலிஸாரால் பல்வேறு விதமான கீழ் தரமான நடத்துகைக்கு அவன் உட்படுத்தப்பட்டான். மிகக் கூடிய வெளிச்சம் பாச்சுகின்ற விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த அறையில் அவன் வைக்கப்பட்டான். அந்த நேரத்தில் அவன் பொலிஸாரிடம் அருந்துவதற்காக நீர் கேட்டான். பொலிஸார் நீரை வழங்க மறுத்தனர். அடுத்த நாள் காலை பத்து மணியளவில் சமந்த பொலிஸாரால் விடுவிக்கப்பட்டான்.

   மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் சமந்த பொலிஸாருக்கு எதிராக அடிப்படை உரிமை வழக்கொன்றை தாக்கல் செய்ய விரும்புகிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.

2. "...சட்டவாக்கத்தின் நோக்கத்திற்காக நியாயமான வகுப்பாக்கம் என்பது தடைசெய்யப்பட வில்லை..., புவியியல் அல்லது அடையக்கருதுகின்ற நோக்கத்தின் அடிப்படையில் அல்லது தொழில் போன்ற பல்வேறு அடிப்படைகளின் மீது வகுப்பாக்கம் செய்யப்படலாம். எனினும் வகுப்பாக்கத்தின் அடிப்படைக்கும் கருத்தில் எடுக்கப்பட்டுள்ள சட்டத்தினால் அடையக்கருதும் நோக்கத்திற்கும் இடையிலே நேரடித்தொடர்பு ஒன்று இருத்தல் வேண்டும்" என Das C.J இனால் Purshottam Vs. Desai [.I.R. 1956 Sc 20] வழக்கில் அவதானிக்கப்பட்டது.

   தீர்க்கப்பட்ட வழக்குடன் தொடர்புறுத்தி மேற் கூறப்பட்ட கூற்றின் மீது கருத்துரைக்க.

3. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதியை தூக்கிலிட்ட சம்பவத்தை தொலைக்காட்சியில் ஒலிபரப்பு செய்தமையை எதிர்த்து, தேசிய தொலைக்காட்சி தலைமைக்காரியாலயத்திற்கு முன்னாள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று சிறிபுற நாட்டின் முஸ்லிம் சமூகத்தவரால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்க சுவர் ஒட்டிகள், பதாதைகள் மற்றும் பொம்மைகள(dummies) என்பவற்றை பயன்படுத்தினர். எதிர்ப்பு ஆர்பாட்டத்தை ஏற்பாடு செய்து இருந்த திரு. முகமட் உரையொன்றை ஆற்றினார். இவரால் குறிப்பிடப்பட்ட சில விடயங்களை கேட்டு ஆத்திரம் உற்ற ஆர்பாட்டகாரர்கள் தேசிய தொலைக்காட்சி தலைமைக் காரியாலயத்தை தாக்கியதுடன் அருகிலிருந்த கட்டிடங்களையும் சேதமாக்கினர். தேசிய தொலைக்காட்சி சேவையின் பணிப்பாளருடைய வேண்டுகோளின் பேரில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து ஆர்பாட்டக்காரர்களை தாக்கினர். தாக்குதலின் போது சுவர் ஒட்டிகள் பதாதைகள் மற்றும் ஆர்பாட்டக்காரர்களால் பயன்படுத்தப்பட்ட ஏனைய பொருட்கள் யாவும் பொலிஸாரால் சேதமாக்கப்பட்டது. பொலிஸாருக்கு எதிராக திரு. முகமட் வழக்கு நடவடிக்கையை மேற்கொள்ள விரும்புகிறார். அவருக்கு ஆலோசனை வழங்குக.

சிறிபுற நாட்டின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை ஒத்தது எனக்கருதுக.

4. " 'நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கையொன்றினால் அடிப்படை உரிமை ஒன்று மீறப்படுதல்' ஒன்றுக்கு அரசு பொறுப்பாகும் என்பதால் கருதப்படுவது என்ன? நிர்வாக அல்லது நிறைவேற்று நடவடிக்கை என்பதற்கு அரசியலமைப்பில் வரைவிலக்கணம் ஒன்று இல்லை என்பதுடன், ஒரு முறையான நிர்வாக அல்லது நிறைவேற்று நடவடிக்கை எது என தீர்மானிக்கும் கடமை உயர் நீதிமன்றத்திடம் விடப்பட்டுள்ளது".

Justice S.Sharvananda – Fundamental Rights in Sri Lanka.(a Commentary) at page 18.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா உமது விடைக்குரிய காரணங்களை தருக.

## பகுதி II – அதிகார பகிர்வு

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களுக்கு விடை தருக)

5. அதிகார பகிர்வு என்ற விடயத்தை எவரேனும் ஒருவர் சிந்திக்கின்ற போது முதலில் அவரின் மனதில் உதிக்கும் விடயம் 'கூட்டாட்சி' என்பதாகும். எனினும் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கக்கூடிய வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. ஆகவே அதிகார பகிர்வின் மீது ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி ஆகிய அமைப்புகளுக்கிடையில் வேறுபாடு ஒன்றை காணுதல் எப்போதும் சந்தேகத்திற்குரிய ஒரு விடயமாகவே இருக்கிறது.

   மேற்கூறப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

6. அரசாங்கத்தினுடைய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகிற போது அது முரண்பாடுகளை தோற்றுவிக்கும். முரண்பாடுகள் தோன்றுகிற போது அத்தகைய முரண்பாடுகளை தீர்ப்பதற்கு அதிகாரங்களுடன் கூடிய சுயாதீனமான அமைப்பொன்றிற்கான அவசியம் ஏற்படுகிறது. ஆகையால் அதிகார பகிர்வின் கீழ் நீதி முறை மீளாய்வு முறைமை ஒன்று இருத்தல் மிக முக்கியமான ஒன்றாகும்.

   மேற்கூறப்பட்ட கூற்றுடன் தொடர்புறுத்தி நீதிமுறை மீளாய்வு மீதான உமது கருத்துக்களை எழுதுக.

7. கீழே குறிப்பிடப்பட்ட கருத்து நோக்குகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தத்தை விமர்சித்து மதிப்பிடுக.

   - 13வது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 82 முரண்பாடாக வந்துள்ளது
   - 13வது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் (1978) அடிப்படை கட்டமைப்பு மாற்றமடைந்துள்ளது.
   - 13வது திருத்தத்தின் மூலம் சட்டவாக்க அதிகாரம் பங்கிடப்பட்டுள்ளது.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினைப்பற்றி குறிப்பு எழுதுக.

   (அ) மாகாண மேல்நீதி மன்றங்கள்
   (ஆ) மாகாண பகிரங்க சேவை
   (இ) அதிகார பரவலாக்கம் எதிர் பகிர்வு

(பதிப்புரிமைபெற்றது)